(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3.]

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

**2024 டிசம்பர் 04, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தின சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும், பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 9.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 9.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2024 டிசம்பர் 03),— "இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 32(4) மற்றும் 33(அ) உறுப்புரைகளின் பிரகாரம் 2024 நவம்பர் 21 ஆம் திகதி வியாழக்கிழமை சனாதிபதியினால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் இப்பாராளுமன்றத்தினால் முறைப்படி அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.